[1982 பிப்ரவரி 11

பாம்பன் பாலம்.

*வினா எண் 148—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாம்பன் பால வேலை என்ன நிலையில் உள்ளது ?

(ஆ) எந்த ஆண்டு முடிவடையும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) பாம்பன் பால வேலை இதுகாறும் 36 விழுக்காடுகள் அளவிற்கு வேலைகள் முடிவு பெற்ற நிலையில் உள்ளது. இப்பால வேலையை எடுத்திருந்த ஒப்பந்தக்காரர்கள் வேலையில் முன்னேற்றத்தை சரிவர காட்டத் தவறியதாலும், வேலையை ஏரேயடியாக நிறுத்திவிட்டதாலும், அவரது ஒப்பந்தம் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 29 ஆம் நாள் அன்று முழுமையாக ரத்து செய்யப்பட்டது. மீதமுள்ள வேலைகளை செய்து முடிக்க புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோர வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கிடையில் சில குறிப்பிட்ட வேலைகள் துறையின் மூலமாகவும் சிறு வேலைக்காரர்கள் மூலமாகவும் எடுத்துச் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

(ஆ) மீதமுள்ள வேலைகளை மறு ஒப்பந்தத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுக் காலத்தில் பால வேலையை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 1978-லே கடல் கொந்தளிப்பின் காரணமாக பாம்பன் பாலத் திட்ட வேலைகள் தடைப்பட்டன. 6 கோடி ரூபாய் என்று ஆரம்பிக்கப் பட்ட அந்த வேலை, இன்றைக்கு 11 கோடி ரூபாயைத் தாண்டிப் போகும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், அந்த வேலை நடைபெற்றுக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து 4 ஆண்டுகளாக வேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால், இதுவரைக்கும் 76 கண்களில் 6 கண்களுக்குத்தான் வேலை நடந்திருக்கிறது. மீதமுள்ள 70 கண்களுக்கு வேலை நடைபெறவில்லை. அது எப்போது முடியும் என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்த வேலையை ஏற்கெனவே மத்திய அரசு அமைச்சர் எல்லாம் கூட பார்த்துச் சென்றிருக்கிறார்கள். சமீபத்திலேகூட வீரேந்திர பாடேல் அவர்கள் இந்த பாம்பன் பாலத்து வேலையை பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் ஏற்கெனவே நீதி மன்றத்திற்குச் சென்று அங்கே ஸ்டே வாங்கி விட்டார்கள். அதற்குப் பின்னால், இப்போதும்கூட இந்த அரசின்

1982 பிப்ரவரி 11]

துறையின் மூலமாக சில பகுதிகளைச் செய்யலாம் என்று நீதித் துறை ஆணையிட்டு இருக்கின்ற காரணத்தினால், அதன்படி நடத்தப்பட்டு வருகிறது. நீங்கள் சொல்வதுபோல் 36 சதவிகித வேலை முடிவடைந்திருக்கிறது. கடந்த 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26 ஆம் நாளிலே அன்றே இந்த வேலை முடிந்திருக்க வேண்டும். 1974-லே ஆரம்பிக்கப்பட்டது. இந்த 4 ஆண்டுகளிலே முடிந்திருக்க வேண்டும். ஆனால், இப்போது 1982 ஆம் ஆண்டு வந்துவிட்டது. ஆக, அந்த அளவிற்கு இந்த வேலைகள் மிகமிக தாமதமாக நடைபெற்று வந்திருக்கிறது. இதிலே நாவிகேஷன் அண்டு நான்-நாவிகேஷன் ஸ்பான் என்று சொல்லக்கூடிய பகுதிகளில், நாவிகேஷன் ஸ்பான் என்பது முக்கியமானது. அந்தப் பகுதியில் சரியாக வேலை நடைபெறவில்லை என்ற காரணத்திற்காகவும், பல்வேறு காரணங்களுக்காகவும், ஏற்கெனவே இருந்து வந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. இப்போது இந்த வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. இன்னும் 3 ஆண்டுக் காலத்தில் முடிவடையும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. செ. சிவசாமி : ஏற்கெனவே இருந்த ஒப்பந்தக்காரர்கள் நிறுத்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஏற்கெனவே செய்த வேலைகள் எவ்வளவு? கடல் கொந்தளிப்பு காரணமாக அவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டதற்கு என்ன தொகை பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதுதான் பிரச்சினையாக இருக்கிறது. கடந்த 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 ஆம் நாள் அன்று வீசிய புயலின் காரணமாக பல்வேறு சாதனங்கள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டன, பழுதடைந்தன என்று கோரி நஷ்டஈடு கேட்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்கிற தொகையை நம்மால் கொடுக்க முடியாது என்று சொன்னோம். அதன் காரணமாக நீதிமன்றத்திற்குச் சென்று ஸ்டே வாங்கினார்கள். அப்படிப்பட்ட நிலை காரணமாகத்தான் பல வேலைகள் மெதுவாக நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

திரு. உ. சுப்பிரமணியன் : இந்தக் குறை வேலையை ஒப்பந்தக்காரர்கள் மூலமும் அரசுத் துறையிலும் செய்வதாகச் சொன்னார்கள். அந்தப் பாலம் அமைக்கும் பணி கேந்திரமான இடத்தில் இருக்கும் காரணத்தால் மிக விரைவாகப் பால வேலை முடிந்தால் நாட்டுக்கு நல்லது என்ற காரணத்தால் முழுவதும் அரசுத் துறையிலேயே அந்த வேலையை எடுத்து நிறைவேற்ற முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இது ஒரு முக்கியமான பாலமாக இருக்கிறது. கடலின் குறுக்கே வேறு எந்த இடத்திலும் பாலம் இல்லை. தமிழ்நாட்டில்தான் அத்தகைய பாலத்தை அமைக்க இருக்கிறோம். நாம் இப்போது பாரதியார் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். '' சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம் '' என்று பாரதியார் பாடினார். இன்றைக்கு அந்த முறையில் இந்தப் பாலத்தைக் கட்டும் பணியில் நாங்கள் ஈடுபட்டுருக்கிறோம். எவ்வளவு சீக்கிரமாக நடைமுறைப்படுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது.

திரு. ஏ. சி. சண்முகம் : பாம்பன் பால வேலை முதல் ஒப்பந்தத்தில் எவ்வளவு மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்டது? 1982 ஆம் ஆண்டு எவ்வளவு திட்ட மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது? ஒப்பந்தக்காரர்கள் வாங்கிய ஸ்டேயை வெகேட் செய்ய அரசு தீவிர முயற்சி எடுக்குமா? ஒப்பந்தக்காரர் யார் என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 1972 இல் போடப்பட்ட திட்டம் இது. அப்போது போட்ட மதிப்பீடு 538 இலட்சம் ரூபாய். இப்போது அது எட்டு கோடி, பத்து கோடியைத் தாண்டிவிடுகிறது. ஒப்பந்தக்காரர்கள் பெயர் நீலகண்டன் பிரதர்ஸ்,

**அங்கம்பாக்கம் கிராமத்திற்கும், திருமுக்கூடலுக்கும் இடையே பாலம் அமைக்கும் திட்டம்.**

***வினா எண். 149**—திரு. ப. வெங்கடசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் தாலூகா அங்கம்பாக்கம் கிராமத்திற்கும் திருமுக்கூடலுக்கும் இடையே பாலம் அமைக்கக்கோரும் பொதுமக்கள் வேண்டுதல் பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : வினாவில் குறிப்பிட்டுள்ள பணியை வருங்காலத்தில் இதர சாலைகள் திட்டத்தின் கீழ் எடுத்துச் செயலாக்க பரிசீலிக்கப்படும்.